<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.190/2024</u>

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 19–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திரு.சண்முகம் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.சண்முகம் | தொழில் | : |
| த/பெ | : ரங்கசாமி | கிராமம் | : சதுமுகை |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

<u>வா.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

19.10.2022ம் தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி ரூ.6,00,000/–க்கு எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 16.11.2023ம் தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி நோட்டரி வழக்குரைஞர் முன்னிலையில் எழுதிக்கொடுத்த பிரமாணப்பத்திரிக்கை அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 19.03.2024ம் தேதியிட்ட வாதி வழக்குரைஞர் பிரதிவாதிக்கு

அனுப்பிய பதிவு அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 23.03.2024ம் தேதியிட்ட பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.4 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி வருகையில்லாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.